(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர்,

திரு. ச, காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1993-94 ஆம் ஆண்டுக் கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 10-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. எஸ். டேனியல் ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94-ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 20-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இல்லாமையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள் ளன. ஆதலால் இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூல கத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன், அது பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

4. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறி முகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.